# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/46 - 2016 දෙසැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2016.12.09

*1996/46 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை வைத்திய சேவைக் குறிப்பு மீதான திருத்தம்**

2014.10.11 ஆந் திகதியிடப்பட்ட 1883/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேலதிக வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட இலங்கை வைத்திய சேவைக் குறிப்பு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

நடைமுறைப்படுத்தப்படும் திகதி

இந்தத் திருத்தம் 2013.11.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

2016.11.02.

| பதவி/தரம் | (அ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| **11.1.2.2 சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரம்** | I. மருத்துவ சேவைக் கோட்பாட்டின் அத்தியாயம் I மற்றும் II இல் பட்டியலிடப்பட்டுள்ள MSc/ MD (மருத்துவ நிர்வாகம்) பட்டம் அல்லது MSc/MD (சமுதாய மருத்துவம்) பட்டம் அல்லது MSc/MD (சமுதாய பல் மருத்துவம்) பட்டம் பெற்றுள்ள மருத்துவ உத்தியோகத்தரொருவர் அல்லது பல் மருத்துவ உத்தியோகத்தரொருவர் ஒருவர் அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புள்ளி முறைகளின் பிரகாரம் இடம்பெற்றுள்ள நேர்முகப் பரீட்சையினூடு சிரேஷ்ட நிர்வாக தரத்தின் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு உரித்துடையவராவர்.<br><br>II. பிரதி மருத்துவ தரத்தில் குறைந்த பட்சம் 03 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

| பதவி/தரம் | (அ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| **11.1.2.2. சிரேஷ்ட மருந்துவ நிர்வாகத் தரம்** (தொடர்ச்சி) | III. சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்திற்குக் கீழ் கொண்டு வரப்படும் சமமான பதவி IV ஆவது அத்தியாயத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், சேவை அவசியத்திற்கேற்ப காலத்துக்குக் காலம் உருவாக்கப்பட்ட எந்தவொரு பதவியும் அதற்கு உள்வாங்கப்படும்.<br><br>**குறிப்பு 7** - சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத்தரத்தின் கீழ் கொண்டு வரும் சமனான பதவிகளுக்கான கட்டாய தகைமைகள் IV வது அத்தியாயத்தின் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இதன் பதவி சமனான பதவியாக கருதப்படும்.<br><br>IV. இப்பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் போது விண்ணப்பதாரிகள் IV வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய முதுமாணிப் பட்டத் தகைமையை கட்டாயமாக பெற்றிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், 2007.04.16 ஆந் திகதியின் இலக்கம் 1493/3 எனும் வர்த்தமானி அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படும் போது சிரேஷ்ட மருத்துவ நிர்வாக பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த கட்டாயத் தகைமை உரித்தாகாது.<br><br>V. உத்தியோகத்தரொருவர் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்திற்குரிய பதவியில் பதிற்கடமை புரியும் சேவைக் காலம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். எப்படியிருப்பினும் அதை நியமித்தல் உரிய நியமன அதிகாரியினால் செய்யப்பட்ட நியமனமாக இருத்தல் வேண்டும்.<br><br>VI. வயதெல்லையானது அனைத்து உத்தியோகத்தர்களும் தற்பொழுதும் அரச சேவையில் இருப்பதால் உச்ச வயதெல்லை உரித்தாகாது. |
| பதவி/தரம் | (ஆ) தேர்ந்தெடுக்கும் முறை |
| **சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரம்** | I. சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் ஏற்படும் வெற்றிடங்கள் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் மூலம் நிரப்பப்படும். வருடாந்த இடமாற்றத்தின் மூலம் பதவியின் வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியாது போகும் சந்தர்ப்பத்தில் அது அறிவிக்கப்படுவதுடன், சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட முறைப்படி நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.<br><br>II. வருடாந்த இடமாற்றம் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை நியமன அதிகாரிக்கு, அவசியமான தகைமைகளைக் கொண்ட ஏற்கனவே பிரதி மருத்துவ நிர்வாக சேவையில் அல்லது சிரேஷ்ட மருத்துவ நிர்வாக சேவையில் உள்ள உத்தியோகத்தர்களில் இருந்து பதிற் கடமை புரிதல் அடிப்படையில் நியமிக்க முடியும். |

இணைப்பு - IV

***சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரம்***

| | மருத்துவ நிறுவனங்கள் (சுற்று நிருபம் 2 - 61/2006) | பதவி | வேண்டப்படும் அத்தியாவசிய கல்வித் தகைமைகள் | நிறுவனங் களின் எண் ணிக்கை | மொத் தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆதார வைத்தியசாலை (B) | இல்லை | - | 40 | இல்லை |
| 2. | ஆதார வைத்தியசாலை (A) | இல்லை | - | 20 | இல்லை |
| 3. | மாவட்ட பொது வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 18 | 6 |
| 4. | மாகாண பொது வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம் | 2 | 2 |
| 5. | போதனா வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம் | 10 | 10 |
| 6. | தேசிய வைத்தியசாலை - (போதனா) | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | இல்லை | இல்லை |
| 7. | தேசிய வைத்தியசாலை, (போதனா) | பிரதிப்பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 2 |
| 8. | லேடி ரிச்வே வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 9. | காசல் வீதி பெண்கள் வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |

**சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரம்** (தொடர்ச்சி)

| மருத்துவ நிறுவனங்கள் (சுற்று நிருபம் - 2 - 61/2005) | பதவி | வேண்டப்படும் அத்தியாவசிய கல்வித் தகைமைகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 10. டீ சொய்சா மகப்பேற்று வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 11. மகமோதர வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 12. தேசிய மனநல நிறுவனம் - அங்கொடை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 13. ஆதார வைத்தியசாலை - முல்லேரியாவ | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 14. SBCH பேராதெனிய | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 15. தேசிய புற்றுநோய் ஸ்தாபனம் - மஹரகமை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 16. மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம் | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 17. NIHS களுத்துறை | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 18. தேசிய இரத்த மாற்றுச் சேவைகள் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 19. தேசிய கண் வைத்தியசாலை | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 20. பல் மருத்துவ ஸ்தாபனம், கொழும்பு | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |

**விசேட பொதுச் சுகாதார ஸ்தாபனங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 21. தாய், சேய் நலம் FHB | பணிப்பாளர் | MD (CM or CD) | 1 | 1 |
| 22. சுகாதார கல்விப் பேரவை | பணிப்பாளர் | MD (CM or CD) | 1 | 1 |
| 23. தொற்று நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு | பிரதான Epidemiologist | MD (CM or CD) | 1 | 1 |
| 24. மலேரியா எதிர்ப்புப் பிரச்சாரம் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 25. யானைக்கால் நோய் எதிர்ப்புப் பிரச்சாரம் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 26. தொழுநோய் எதிர்ப்புப் பிரச்சாரம் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 27. NPTCCD | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 28. National Quarantine Service | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 29. E&OH | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 30. போசணைப் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 31. போசணை இணைப்புப் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 32. YEDD | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 33. E&UH | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 34. புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 35. தொற்றா நோய்களின் கட்டுப்பாட்டுப் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 36. மனநலம் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 37. NSACP | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) | 1 | 1 |
| 38. தேசிய டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 39. Healthcare Quality and Safety | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 40. மாகாண மட்ட நிறுவனங்கள் | மாகாணப் பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 9 | 9 |
| 41. | பிரதி மாகாணப் பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 9 | 9 |
| 42. மாவட்ட மட்ட நிறுவனங்கள் | மாவட்டப் பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 26 | 26 |

**தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள விசேட நிறுவனங்கள்**

| மருத்துவ நிறுவனங்கள் (சுற்று நிருபம் ( 2 - 61/2005) | பதவி | வேண்டப்படும் அத்தியாவசிய கல்வித் தகைமைகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 43. சர்வதேச சுகாதாரம் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 44. திட்டமிடற் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 45. தகவற் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 46. Organization & Development | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 47. கொள்கை பகுப்பாய்வு, அபிவிருத்தி | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 48. மூன்றாம் நிலைக் கவனிப்பு | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 49. மருத்துவ சேவைகள் | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 50. தனியார் சுகாதார சேவைகள் | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 51. முதன்மை நிலைக்கவனிப்புச் சேவைகள் | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 52. மருத்துவ வழங்குநர் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 53. ஆய்வுகூடச் சேவைகள் | பணிப்பாளர் | MSc or MD (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 54. மருத்துவ தொழில் நுட்பங்களும் வழங்குதலும் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 55. பயிற்சி வழங்குநர் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 56. ஆய்வுப் பிரிவு | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| 57. பல் மருத்துவ சேவைகள் | பணிப்பாளர் | MSc or MD (CM or CD) or (மருத்துவ நிர்வாகம்) | 1 | 1 |
| | | மொத்தம் | | 112 |

மேற்படி அட்டவணையானது, திட்டமிடற் பிரிவினால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களுக்கமையத் தயாரிக்கப்பட்டது.

12-723

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.